DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. O.S. No.103/2022

Petitioner side witness for P.W.2

| | | | |
|---|---|---|---|
| Name | ...திரு. ரவிராம்தாஸ் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **05.12.2025.**

<u>முதல்விசாரணை:–</u>

நான் செயற்பொறியாளர் விநியோகம் தமிழ்நாடு மின்பகிர்மான கழகம் கோவில்பட்டியில் பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து எனக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணை பெற்று அழைப்பாணையில் கோரப்பட்டுள்ள ஆவணங்களுடன் சாட்சியமளிக்க வந்துள்ளேன். 29.11.2021 தேதியிட்டு கண்ணப்பன் என்பவர் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் தகவல்கள்கோரி தாக்கல் செய்த மனுவை 01.12.2021 அன்று பொது தகவல் அலுவலரால் பெறப்பட்டு அதில் கோரப்பட்டிருந்த தகவல்களுக்கு 12.01.2022 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் கொடுக்கப்பட்டுள்ளது. நாங்கள் வழங்கிய தகவல் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கோவில்பட்டி மெயின்ரோடு பகுதி எனது ஆளுகைக்குட்பட்ட பகுதி. அந்த பகுதியில் கம்பியாளராக இருதயராஜ் என்பவர் பணியாற்றி வந்ததாக வா.சா.ஆ–9 ல் பொது தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. 30.10.2019 அன்று கோவில்பட்டி மெயின்ரோட்டில் அமைந்துள்ள கதவு எண். 378 ல் ஏற்பட்ட தீவிபத்து சம்மந்தமாக செயற்பொறியாளர் சகர்பான் அவர்கள் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் வழங்கிய தகவல்தான் வா.சா.ஆ–9. மேற்படி தகவலின்படி மேற்படி கடைக்கு அருகே மின்கம்பத்தில் ஏதாவது பழுது ஏற்பட்டதாக கூறியுள்ளார்களா என்றால் மின்கம்பத்தில் பழுது எதுவும் ஏற்படவில்லை. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் விசாரணையின்படி தீ விபத்திற்கு காரணம் என்னவென்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மின்கசிவினாலோ, மின்உராய்வினாலோ விபத்து ஏற்படவில்லை என்று கண்டறியப்பட்டுள்ளது.

பிரதிவாதிதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லாததால் குறுக்குவிசாரணை இல்லை என முடிக்கப்பட்டது.

BREETHA M

Digitally signed by BREETHA M
Date: 2025.12.05 07:45:04 +0530